[illegible]
V5 No7
July 1932

3L
R673[illegible]211,N28
N32-5-7
187165

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதுரு வாணியை உள்நாடு"

| | | |
|---|---|---|
| மலர் ரு | ஆங்கீரச ஆண்டு ஆடித் திங்கள்<br>1932 ஞு ஜூலை௴ | இதழ் எ |

## பெரிய புராணம்

[பத்திராசிரியர்]

சைவச் சமயத்தைச் சார்ந்த மெய்யடியார்களது வரலாறுகளைப் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட விரித்துரைப்பதும் திருவருள் நெறியின் பெற்றியினையும் நுட்பத்தையும் எளிய மக்களும் உணரும் வகையில் விளக்குவதும் பெரிய புராணமே யென்பது அறிஞர்கள் அறிந்த தொன்று. இதைக் காவிய லக்ஷணங்கள் பொருந்திய சிறந்த இலக்கிய நூலாகவும், சைவ சமயக் கோட்பாடுகளை விளக்கும் சிறந்த சமய நூலாகவும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலின் மூலத்தைச் செவ்விதின் ஆராய்ந்து நாயன்மார்கள் சரிதத்தையும் தூய தமிழ் வசனத்திலெழுதி அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அச்சிட்டார்கள். இதன் பிறகு வேறு சில பிரதிகள் வெளிவந்தபோதிலும், சிறந்த பதவுரையாவது, அரும்பதவுரை ஆராய்ச்சியுரைகளாவது நூல் முழுமைக்கும் இதுவரை வெளிவரவில்லை. இக்குறையை நீக்கத் தமிழ்நாடுசெய்த தவப்பயனாய், சைவசித்தாந்த நுட்பங்களைத் திருமயிலை மகாவித்வான் தணிகாசல முதலியார் முதலிய பேரறிஞர்களிடத்திற் பயின்றவரும், தமிழிலக்கண விலக்கியங்களிற் சிறந்த ஆராய்ச்சியுடையவரும், மேல் நாட்டுத் தத்துவ நூன்முடிபுகளை நம் நாட்டுச் சமய முடிபுகளோடு பொருத்திப் பல ஒற்றுமைகள் கண்டு மகிழ்பவரும், "நவசக்தி" ஆசிரியரும், எமது கெழுதகை நண்பருமாகிய திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் பெரிய புராணத்தை நன்காராய்ந்த மூலத்தோடும், தாம்

எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரைகளோடும், வசனத்தோடும் சஞ்சிகை ரூபமாக வெளியிடத் தொடங்கியது நமக்கு அளவற்ற மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. இத்தகைய பதிப்பை வெளியிடல் வேண்டுமென்று நாம் அவர்களைப் பல ஆண்டுகளாகக் கேட்டதுண்டு. அவ் வேண்டுகோள் இப்போதுதான் பலிதமாயிற்று. முதல் சஞ்சிகையில் (48 பக்கங் கொண்டது) பாயிரமும் திருமலைச் சிறப்பும் சிறந்த ஆராய்ச்சியுரை அரும்பதவுரைகளோடும் வசனத்தோடும் வெளிவந்துள்ளன. சிறப்பாக,

"வெருளில் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளின் ஆகும்எனப் புகல்வாம் அன்றே"

என்ற சேக்கிழார் வாக்கில் "வானிழல்" என்பதன் பொருளையும் நுட்பத்தையும் முதலியாரவர்கள் விளக்கியுள்ளது மேனாட்டு அறிவியற் றுறையிற் பயின்ற எம்போலியர்க்குப் பெரியதொரு மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. இடையிடையே மேற்கோள்களாகச் சங்க நூல்களிலிருந்தும் திருமூலர் திருமந்திரம், தேவாரம், சிவஞான சித்தியார் முதலிய சைவத் திருமுறைகள் சாத்திரங்களிலிருந்தும் பல பகுதிகளைப் பெய்துள்ளது தமிழ்ப் புலவர்கட்கும், அழுத்தமான சைவர்கட்கும் பெரு விருந்தாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

இவ்வரிய வெளியீடு இருபது சஞ்சிகைகளில் முடியக்கூடுமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு மாதத்திலும் 48 பக்கங்கொண்ட ஒரு சஞ்சிகை வெளிவரும். தனிச் சஞ்சிகை விலை அணா 4. புத்தக முழுவதற்கும் முன்பணம் சென்னை வாசிகள் ரூபா 3-8-0-ம், வெளியூரார் ரூபா 4-ம் அனுப்பினால் போதும். முதற் சஞ்சிகை ஜூன்மீ வெளிவந்தது. வேண்டுவோர் காரியஸ்தர், முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கெழுத வேண்டும். உண்மைச் சைவப் பற்றுடையோரும், நாங்களும் சைவர்களே யென்று வாய்ப் பறை யறைவோரும், மற்றையோரும் உடனே முன்பணம் அனுப்பி இத் திருத்தொண்டில் ஈடுபடுமாறு வேண்டுகிறோம்.

## திருவள்ளுவரும், உள்நூலும்*

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., M. L.,]

*அவைத்தலைவரவர்களே, அறிஞர்களே !*

நான் வேறொரு வேலையினிமித்தமாக இவ்விடம் வந்தபொழுது சைவ சித்தாந்த சமாஜத்தின் காரியதரிசி அவர்கள் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசும்படி சொன்னார்கள். அதன்மேல் "திருவள்ளுவரும், உள

* இது 15-5-32 மாலை 6 மணிக்குச் சென்னை இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் "குகானந்த நிலைய"த்தில், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆதரவிலும், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையிலும், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., M. L., நிகழ்த்திய சொற்பொழிவு; திரு. G. கலியாணம், B. A., Dip. Ec. அவர்கள் தம் கைக்குறிப்பினின்றும் வரைந்தது.

187165
சென்னை-600 005.



நூலும்" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டேன். இப்பொருள்பற்றி வேறொரு இடத்தில் முன்பு பேசியிருப்பதாலும், இதற்காகத் தனி ஆராய்ச்சி செய்யவேண்டி யில்லாமையாலும் சுலபமாகப் போய்விடு மென்று இதைப்பற்றியே சொல்லலாம் என்று நினைத்தேன்.

முற்காலத்திலேயே தமிழர்கள் மனதைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். ஆனால் அதன் தத்துவங்கள் அடங்கிய நூல் ஒன்றும் இப்பொழுது நமக்குக் கிடைத்திலது. அப்பொழுது இருந்திருக்கலாம். மேல் நாட்டினர் மனமும் (Mind) ஆன்மாவும் (Soul) ஒன்றென்றே சொல்லிவிடுவர். தமிழர்கள் முன்பிருந்தே ஐம்பூதங்களைப்பற்றி உணர்ந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்தில் நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐம்பூதங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. பஞ்சபூதங்களில் ஒரு பூதத்தை எடுத்துக் கொண்டால் வேறு பூதங்களும் அடங்கி யிருக்கின்றன. மண் என்று எடுத்துக்கொண்டால் பிருதிவிதத்துவம் மாத்திரம் இன்றி நீர் முதலிய வேறு தத்துவங்களும் அடங்கி யிருக்கின்றன. திருவள்ளுவரும்,

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"

என்று ஐந்து பூதங்களையும் சொல்லியிருக்கிறார். மற்றும்,

"சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்றும் கூறியிருக்கிறார். ஆனால் இவைகள் மேற்சொன்ன ஐந்து பூதங்களின் குணங்கள் என்று கொள்ளுதல் கூடாது.

திருவள்ளுவர் தம் திருக்குறளில் மனம், நெஞ்சு என்றே அநேக இடங்களில் கூறியிருக்கிறார். மனதிற்கு நினைத்தது முடித்தல் (Thought-power) என்னுங் குணம் உண்டென்பதை,

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்னும் குறளிலும்,

"வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற"

என்னும் குறளிலும் சொல்லியிருக்கிறார்.

யான் முதலில் சைவசித்தாந்த கருத்துக்களுக்கேற்ப திருவள்ளுவர் மனதைப்பற்றிச் சொல்லியிருப்பதைக் கூறுகிறேன். முதலாவதாக, கலை, வித்தை, அராகம் என்ற தத்துவங்களை எடுத்துக்கொள்வோம். கலா தத்துவத்தை,

"மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி யினத்தானாம்
இன்னா னெனப்படுஞ் சொல்"

என்ற குறளில் அடக்கியிருப்பதைக் காணலாம். வித்தை தத்துவத்தை,

"மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு"

என்ற செய்யுளினின்றும் உணர்கிறோம்.

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்"

என்ற குறட்பாவிலும்,

"உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்"

என்ற குறட்பாவிலும் அராக தத்துவத்தைப் பற்றித் தெரிந்துகொள்கிறோம். உள்ளத்தால்தான் உள்ள முடியும்; கண், வாய் முதலியவற்றால் உள்ள முடியாதல்லவா?

இப்பொழுது காலம், நியதி என்ற இரண்டையும் எடுத்துக்கொள்கிறேன். ஒருவனுடைய மனத்தன்மையால்தான் காலத்தின் நன்மை, தீமை தோன்றும். இக்கருத்தையே ஆங்கில மகா கவியொருவர், "It is the mind that makes a heaven of hell and a hell of heaven" என்று கூறியிருக்கிறார்.

"மாலைநோய் செய்தல் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்"

என்ற குறளில் மாலை இவ்வாறு துன்பஞ் செய்யும் என்பதைக் காதலர் பிரியாத காலத்தில் நான் தெரிந்துகொள்ளவில்லை என்று தலைவி கூற்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு மாலை நன்றாகத் தோன்றியது; பின்பு அதே மாலை அப்படியில்லை யென்ற கருத்தால் மனத்தன்மையால், கால வேறுபாடு தோன்றும் என்று அறிகிறோம். மற்றும்,

"ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள் வைத்தேங்கு பவர்க்கு"

என்ற குறளிலும்,

"கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா"

என்ற குறளிலும், தலைவி, தலைவன் பிரிந்த காலை காலம் நீடித்துத் தோன்றுவதையும், தலைவன் தன்னுடனுறையுங் காலம் நீடித்திருக்க வேண்டுமென்றும் கூறுகிறாள். இதுவும் மனத்தன்மையால் காலபேதம் தோன்றுவதைக் குறிக்கும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணத்தில் "ஊழியாம் ஒரு கணந்தான் அவ்வூழி யொருகணமாம்" என்று கூறியுள்ளார் சேக்கிழார்.

நியதி என்பதைப்பற்றி யெல்லாம் 'ஊழ்' என்னும் அதிகாரத்தினின்றும் தெரிந்துகொள்ளலாம். ஏனெனில் ஊழ், நியதி என்பவை ஒருபொருளனவே.

இனி, மனத்தின் வேறுசில தத்துவங்களைப்பற்றி யுரைக்கிறேன். பொறிவுணர்ச்சியை (Sensation),

"ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு"



என்ற குறளிற் காண்கிறோம். நினைவுணர்ச்சியை (Perception),

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்"

என்று காட்டியிருக்கிறார். கருத்துணர்ச்சி (Conception),

"அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு"

என்றபாவில் அடங்கியிருக்கிறது. அளவறிந்தார் என்பதிலிருந்து முற்காலத்தில் தமிழர்கள் அளவுநூல் (தர்க்கம் - Logic) வல்லாராய் இருந்தார்கள் என்பது பெறப்படுகின்றது. தன்னெஞ்சு (Conscience) என்பதை,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்ற குறளினின்றும் அறிந்துகொள்கிறோம். புனையுமாற்றல் (Imagination),

"காணுங்காற் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் றவறல்லவை"

என்ற செய்யுளில் அறியக்கிடக்கின்றது. ஆராய்ச்சியை (Investigating faculty)

"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து"

என்ற குறளடிகளால் உணரலாம். அலமருதல் (Dilemma),

"காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு"

என்ற கூற்றால் விளங்குகிறது. ஐயம் (Doubt),

"அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு"

என்ற பாவிற்காணலாம். திரிபுணர்ச்சியை,

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று"

என்று கூறியிருப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

இனி நனவு, கனவு, துயில், துரியம், துரியாதீதம் என்பவற்றைப் பற்றித் திருவள்ளுவர் கூறியிருப்பதை ஆராய்வோம்.

நனவு, கனவு என்பவற்றை;

"நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்"

என்ற குறளில் காணலாம். துயிலைப்பற்றியோ,

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்றதினின்றும் அறிகிறோம். துரிய நிலையை,

“உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ள மர்க்கண்ணாள் குணம்”

என்ற குறட்பாவில் அமைத்திருக்கிறார். துரியா தீதத்தை “அவாவறுத்தல்” என்னும் அதிகாரத்தில் “பேராவியற்கை” என்று கூறியிருப்பதினின்றும் தெரிந்துகொள்ளலாம். மனத்தின் அடக்கு மாற்றலை (Self control)

“புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை”

என்ற குறளில் கூறியிருக்கிறார். மனத்தின் உன்னுதல் (Will) தொழிலை,

“ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சக்
கூடுவே மென்ப தவா”

என்றதால் பெறப்படும். குணவுணர்ச்சியை (Emotion),

“மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்”

என்ற பாட்டினின்றும் அறியலாம்.

“பெறாஅமை யஞ்சும் பெறிற் பிரிவஞ்சு
மறாஅ விடும்பைத்தென் னெஞ்சு”

என்பதிலிருந்து மனத்தின் அச்சத்தைப்பற்றிக் கூறிய துணர்கிறோம். மேலும், அவலம், கவலை, கோடுகொடேறுதல் முதலிய மனநிலைகளைப் பற்றியும் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

“உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு”

என்று நெஞ்சை நகையாடிக் கூறுகிறார்.

“எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு”

என்ற செய்யுளிலும்,

“ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து”

என்ற செய்யுளிலும் சொல்லியவற்றை உற்றுநோக்குழி மனம் ஒரு நுண்ணிய உடல்போன்றிருப்பதை அறிகிறோம்.

“மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற”

என்று உள்ளத்திற் குற்றமில்லாமையே பெரிய அறம் என்று உணர்த்துகிறார். மனக்கவலை யறுதல்தான் முடிந்த இடம் என்பதை,

“தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்றலரிது”



என்ற செய்யுளில் அறிவிக்கிறார். திருஞானசம்பந்த சுவாமிகள் “நன்னெஞ்சே வுனையிரந்தேன்” என்று கூறியுள்ளார்.

“ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு”

என்றதில் மனம் உண்மையை ஆராய்ந்து அதனை அனுபவத்தி லுணருமாயின் மீட்டும் அவனுக்குப் பிறவியில்லை என்கிறார். இப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து உளநூல் திருவள்ளுவர் காலத்துக்கு முன்பே யிருந்திருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. மக்கள் அப்படி யறிந்திருந்தால் தான் திருக்குறளைப் படிக்க எளிதாயிருந்திருக்கும்; திருவள்ளுவரும் இந்நூலை எழுதவும் நேர்ந்தது. முன்பு ஒருவர் “திருவள்ளுவரும் தாவாநூலும்” என்ற பொருள்பற்றிப் பெரியதொரு சொற்பொழிவாற்றினார். அளவு நூல் (Logic) கருத்துக்களும் திருக்குறளில் காணக் கிடக்கின்றன. இன்னும் வேறு வகை நூற்கருத்துக்களும் அதில் அடங்கி யிருக்கலாம். அறிஞர்கள் அதை ஆராய்ந்து வெளிப்படுத்தினால் பலர்க்கும் பயன்படும் என்ற விண்ணப்பத்துடன் என் பேச்சை நிறுத்துகிறேன்.

# தேவாரங்களும் மறையும்

[ஈ. த. சோக்கம்மாள், பி. ஏ., எல். டி.,]

“மறைகளாயின நான்கு; மற்றுள பொருள்களுமெல்லாம்
துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையு நன்மையுமாய
அறையும் பூம்புனலானைக் காவுடை யாதியைநாளும்
இறைவ னென்றடிசேர்வா ரெம்மையு மாளுடையாரே.”

நமது சமயாசாரியர்களில் ஒருவரான நம்பி ஆரூரர் மறைகள் நான்கே என்றும் ஏனைய மறைகளெனப் புகலப்படும் தொன்மையும் நன்மையுமுடையன தோத்திரங்களென்றும் எக்கருத்தால் செப்பினாரென்பது, ஆராய்ச்சியின்கண் செவ்வனே புலப்படவில்லை. மறைகளாயின: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்கின்ற நான்கு வேதங்கள் என மொழியப்படும். அவையே “வினையின் நீங்கி விளங்கிய அறிவில் முனைவன் கண்ட” முதல் நூல்களாம். ஏனைய இலக்கியங்கள் யாவும் வழிநூலும் சார்பு நூலுமாம் என்றே ஆன்றோர் மொழிவர். தோத்திரங்கள், நூலின் பகுதியில் அடங்காத பாமாலைகள், இறைவனைக்கண்ட பெருமக்கள் தங்கள் சுவாநுபூதியில் உதித்தவாறு தங்கள் அனுபவத்தையும் ஆனந்தத்தையும் மனதுள் அடக்கமுடியாது ஆர்வம் பொங்கத் தம்மையும் அறியாது தமது நாவும் தம் வசமின்றிச் சொற்கள் பொங்கப் பாடுவதாம். இதை சம்பந்தர் திருவாக்கால் காண்க:—

“களங்குளிர்ந் திலங்கு போது காதலாலு மாலுமாய்
வளங்கிளம் பொனங்கழல் வணங்கிவந்து காண்கிலார்;

துலங்கிளம் பிறைச்சென்னித் திருத்தியாய்! திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலாம் உகந்து கந்து ரைப்பனே."

வசந்த காலத்தில் குயில் கூவுவதும், விடியற் காலத்தில் வானம்பாடி பாடுவதும், எங்ஙனம் இயற்கையின் சுபாவமோ, அங்ஙனமே அருள் ஒளியின் இன்பவெள்ளத்தை அனுபவிக்கும் பெருந்தகைகள் பாடுவது தனைமறந்த தொழிலாம். எனவே, தோத்திரம் மூவகை நூலுக்கும் அதீதமான பொருளென்றும் அது யாப்பிலே காணப்படினும் நூலெனக் கொள்ளாது நூலிற் சிறந்த பாமாலை என ஆன்றோர் கொண்டனர்.

எனவே, மறைகளானவை யாவை? ஏன் அவ்வாறு நாமம் வகித்தன என்றும், அவற்றைத் தேவாரத்தோடு ஒப்பிடாமல் பிரித்திட வேண்டுமென்று நம்பி ஆரூரர் கூறியமொழியில் வன்மையுண்டோ என்றும் ஆராய்வோம். "மறை" என்னும்மொழி மறைந்திருப்பதுஎன்றும், மறைக்கப்பட்டதென்றும் மறைவான பொருள்களை யுடையதென்றும், இன்னும் பலவிதமான பொருள்களைத்தர இடங்கொடுக்கும். எவ்வாறாயினும், இதை ஒரு ஆகுபெயராக எடுத்துக்காட்டலாம். மேற்கூறிய நான்கு வேதங்களில் மறைந்திருப்பது யாது? மறைக்கப்பட்டது யாது? என்பனவும் இவற்றைச் சார்ந்த பற்பல ஆராய்ச்சிகளை ஸ்ரீமான் தாஸ்குப்தா (Das gupta) அவர்கள் அமெரிக்காதேசத்தில் சிக்காகோ (Chicago) பட்டணத்தில் நார்மன் வெயிட் ஆர்ரிஸ் (Norman Wait Harris) ஏற்படுத்திய உபந்நியாசங்களில் விவரமாக வெளியிட்டிருக்கிறார். அவ்வுபந்நியாசங்கள் ஆங்கிலங்கற்ற நமதுசகோதரர்கள் யாவரும் வாசிக்கவேண்டியனவே. அவர் செய்த ஆராய்ச்சியின் சில பகுதிகளில் இங்கு சில எடுத்துக்காட்டுவேனாக.

வேதங்களில் ஒவ்வொன்றும் பரம இரகசியமாகவே வைக்கப்பட்டதென்பதும், பிராமணர் அல்லாதார் வேதஒலியைக் கேட்கவும் பாத்திரர் அல்லர் என்று நீக்கப்பட்டிருந்ததும் யாவரும் உணர்ந்தனவே. இக்காலத்தில் ஆங்கிலேய அரசாட்சியில் நான்குவேதங்களும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் வெளியாக்கப்பட்டு யாவரும் கற்கவும் அவற்றில் ஆராய்ச்சி செய்யவும் இலேசான வழிகளும் ஏற்பட்டு விட்டன. இருக்கு வேதமானது, நால்வேதங்களில் முதலாவதாக எடுக்கப்பட்டது. அதில் 1028 அநாதியான பதிகங்களும், பத்தாயிரத்து அறுநூறு செய்யுள்களும் அடங்கி யிருக்கின்றன. இருக்குவேத காலத்திலேயே, அதர்வண வேதமானது எழுநூற்று முப்பத்தொரு பதிகங்களும், 6000 செய்யுள்களும் பெற்றிருந்ததென்று தாஸ்குப்தா கூறுகிறார்.

இவ்வாறு மறைக்கப்பட்டிருந்த வேதங்களின் அளவும் இக்காலத்தில் வெளியாயிற்று. இம்மறைகளின் முதல் இரகசியம் அல்லது மறைவாவது யாகம் அல்லது ஓமம் என்னும் தழலோம்பும் முறை. இது சரிவர நடப்பின் மன இஷ்டத்தைப் பூர்த்தியாக அக்கணமே தருமென்பது. இவ்வாறு யாகம் செய்வதும், அதன் பலனும் காரணகாரிய ரூபமாய் நிற்குமென்பதும் அது கடவுளரையும் வெல்லக் கூடுமென்பதும், ஏற்பட்டதோர் நிர்ணயமாம். இக்கருத்து, தக்கன் செய்த யாகத்திலும் தாருகாவனத்து இருடிகள் செய்த யாகத்திலும் காணலாம். முழுமுதற் கடவுளையே வருத்தத் தக்க சக்தி யாகங்களுக்கு இல்லை என்பது நமது சமய குரவர்கள் சித்தாந்தமாயினும், நான்மறையோர் அக்காலத்திற் செய்த எரி ஓம்பலை இயற்கையிலுள்ள இகபர சுகதுக்கங்களுக்குப் பயன்படும் கருவியென நமது சமயகுரவர் கருதினதாகவே தேவாரங்கள் காட்டுகின்றன.

இரண்டாவது மறைவு அல்லது இரகசியம் வேதங்களானவை வகுத்த சட்டங்கள், யுக்தி அனுபவத்தால் பரிசோதிக்கக் கூடாதென்பது. ஏனெனில் அவை அநாதியாயும் அமலமாயும் மனிதஅறிவுக்கு அதீதமாயுமிருப்பதால் அதை ஆராய்ச்சி முறையில் பரிசோதனைசெய்து பிறகு வணங்க வேண்டுமென்பது பொருந்தாததாகும்.

"வேதமோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதிநூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதியங்க மோராறு முணரிலென்
ஈசனையுள்கு வார்க்கன்றி யில்லையே"

என்ற அப்பரும்,

"வேதமாகிய வெஞ்சுடர் ஆனையார்"

என்றும், வேதங்கள் கடவுள் வடிவென்றும் கூறுவார். இவ்வாறு வேதங்கள் விளங்கினும், திருவானைக் காவலிலுள்ள சிவபெருமானைத் தமக்குத் தலைவனாக வணங்குவோர் எம்மைப்போன்ற சிவநேசர்களையும் அடிமையாகக்கொண்டவர் எனச் சுந்தரர் முடிக்கின்றார். "எம்மையும்" என்றதால் ஔவையார் கூறுயவாறு சிவத்தொண்டர்கள் திருஉள்ளத்தைக் காட்டினும் இவ்வண்ட சராசரங்கள் யாவும் பெரிதாகா. ஆகையால் அவர்களை "ஆளுடையர்" என்றதில் எல்லாப்பேறு மமையுமென்றும்.

இத்தகைய பயனைக்காட்டும் தேவாரமோ மறைக்கப்பட்டது மன்று; மறைந்திருப்பது மன்று. யாவருக்கும் வெளிப்படையாய்க் காகம் உறவு கலந்துண்ணுவதுபோல் பெருவாழ்வைத் தரும்.

துன்னு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்காந் தார்சடை மேலவர்
அன்ன லார்வயல் சூழ்மண்ஞ் சேரியார்
வன்ன லார்கழல் வாழ்த்தல் வாழ்வாவதே. —அப்பர்

# மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்

[பத்திராசிரியர்]

" எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்."

தெண்ணீர் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டிலே, மதுரையம்பதிக்கு ஏழு மைல் தூரத்திலே, வைகையாற்றங்கரையிலே, திருவாதவூரிலே, இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து அறுநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் அந்தணர் குலத்திலே மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் வாதவூரடிகள் தோன்றி யருளினார். இவர் வாதவூரர் என்ற பெயர் சூட்டப்பெற்று இளமையிலேயே எல்லாக் கலைகளையும் கற்று நல்லொழுக்கமுடையவரா யினார். இவரது மேன்மையை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசன் இவரைத் தனது முதல் மந்திரியாக்கித் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டத்தையும் சிவிகை, குடை, கவரி முதலிய விருதுகளையும் திரண்ட செல்வத்தையும் இவருக்களித்தான். இவர் சில காலம் அறநெறி பிறழாது அமைச்சுரிமை செலுத்தி வந்தார். ஆயினும் அதில் பற்றுவையாமல் சிவஞானம் தரவல்ல நல்லாசிரியனை வேண்டி நின்றார்.

ஒருநாள் ஆரியவணிகர் கீழ்க்கடற்கரையில் நல்ல குதிரைகளை விற்பனைக்காகக் கொண்டுவந்துள்ள செய்தியையறிந்த அரசன், மிகுந்த பொன்னைத் தந்து வாதவூரரைக் குதிரைகள் வாங்கி வரும்படி பரிசனங்களோடு அனுப்பினான். வாதவூரரும் கடினமான வழி பல கடந்து திருப்பெருந்துறை யென்ற இடத்தை யடையும்போது ஆங்கொரு சோலையினின்றும் அரகாம முழக்கம் கடல்போன் முழங்குவதைக் கேட்டார். ஆங்கு சிவபெருமானார் மானுடச்சட்டைதாங்கி மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல வாதவூரருக்கு ஞானோபதேசம் செய்யத் திருவுளங்கொண்டு ஒரு சிவயோகி வேடம் பூண்டு சிவகணங்கள் தமக்குச் சீடர்களாக வீற்றிருக்க, ஒரு குருந்தமரத்தடியில் அவர்கட்கு ஞானப் பொருள்களை விளக்கிக்கொண்டிருந்தார்.

இக்காட்சியைக்கண்ட வாதவூரர் 'தொழுதகை தலைமேலேறத்துளும்பு கண்ணீருள் மூழ்கி' குருமூர்த்தியின் திருவடிகளில் வீழ்ந்து தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். இதற்கென்றே வந்துள்ள குருமூர்த்தியும் வாதவூரருக்குத் திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால் ஞானதீக்கை செய்தருளினார். சிவஞானம் கைவரப்பெற்ற வாதவூரர் உள்ளக் கனிவொடு பல பாடல்களைத் தங்குருமீது பாடினார். குருந்தமேவிய குருநாதரும் இவர் பாடல்கள் அருளொளி வீசும் மாணிக்கவாசகமாக இருத்தலுக்கு மகிழ்ந்து வாதவூரருக்கு "மாணிக்கவாசகர்" என்ற தீக்ஷாநாமம் சூட்டினார். மாணிக்கவாசகரும் தமது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றும், அரசன் தந்த பொருளும் இறைவன் உடைமைகளே யென்றும், அரசனும் தாமும் அடிமைகளேயென்றும் உணர்ந்து அவைகளை இறைவனாகிய குருமூர்த்திக்கே அர்ப்பணம் செய்தனர். இறைவனும் அப்பொருளைப் பெருந்துறையில் திருக்கோயில் பணித்து அடியவர்க்குதவுமாறு கட்டளையிட, அவ்வாறே செய்து உலகப் பொருள்களை நீத்துக் கோவண ஆடையும் திருநீறும்கொண்டு மெய்த்துறவியாகத் திருப்பெருந்துறையில் அமர்ந்திருந்தனர்.

பரிசனங்களால் இவற்றை யறிந்த பாண்டியன், உடனே தன்னிடம் வரும்படி ஒரு திருமுகம் விடுத்தான். மாணிக்கவாசகர் அத்திருமுகத்தைப் பொருட்படுத்தவில்லையாயினும், இறைவன் "நாம் ஆவணி மூலத்தில் குதிரைகளைக் கொண்டு வருவோம். நீ முன்னதாகச் செல். இம்மாணிக்கக் கல்லையும் அரசனிடம் கொடு" என்று கட்டளையிட்டு ஒரு மாணிக்கத்தையும் தர, அதைக்கொண்டு அரசனிடம் தந்து ஆவணி மூலத்தில் குதிரைகள் வருமெனச் சொல்லி அரசனை மகிழ்வித்தார். ஆவணி மூலத்துக்கு இரண்டொரு நாள் முன்னர் வரை மதுரையின் பக்கலிலாவது பெருந்துறையிலாவது குதிரைப்படை யொன்றும் வரக்காணாத பாண்டியன், மாணிக்கவாசகர் தன்னை ஏமாற்றிப் பொய்யுரைத்தனரென்றெண்ணி அவரைச் சிறையிலிட்டுப் பலவகையாகத் துன்புறுத்தினான். சுவாமிகள் எம்பெருமானையே நினைந்து " நன்றே செய்வாய் பிழைசெய்வாய், நானோ இதற்கு நாயகமே " என்ற உறுதியோடு விளங்கினார்.



ஆவணி மூலத்தன்று காலையில் குதிரைகள் வந்தன. ஆலவாய்க் கடவுளும் குதிரைச் சேவகனாக வந்தான். பாண்டியன் மனமகிழ்ந்து மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இறைவன் திருவிளையாடலால் நரிகளே குதிரைகளாக வந்தன. அன்றிரவே மீண்டும் அவைகள் நரிகளாயின. பாண்டியன் சினம் மிகுந்தவனாய் மாணிக்கவாசகரை மீண்டும் துன்புறுத்தினான்; உச்சி வேளையில் சுடுகின்ற வைகை மணல் நடுவே நிறுத்தினான். உடனே இறைவன் கருணை கூர்ந்து வைகையில் பெருவெள்ளத்தை நிரப்பினான். வெள்ளம் கரைகளை யுடைத்து மதுரைக்குள் பாய்ந்தது. அமைச்சர் சிலரால் மாணிக்கவாசகப் பெரியாரைத் துன்புறுத்துவதால் இக்கேடு வந்ததென அரசன் உணர்ந்து, அவரை விடுவித்து வணங்கி வெள்ளத்தைத் தடுத்து அருள்புரியுமாறு வேண்டினான். அவரும் கரையிற் செல்லவும் வெள்ளப் பெருக்கு நின்றது. உடைப்புக்களை யடைத்தற்கு மதுரையின் குடிகளிடம் கட்டளையிட்டு மாணிக்கவாசகர் நிட்டை கூடியிருந்தார்.

எல்லா உடைப்புக்களும் அடைபட்டன. வந்தியென்ற கிழவியின் பங்குமட்டும் அடைபடவில்லை. இறைவனே அவளுக்குக் கூலியாளாக வந்து அவள் தந்த பிட்டையுண்டு வேலைசெய்யாமல் திருவிளையாடல் புரிந்தான். அரசன் வந்தியின் ஆள் வேலை செய்யாததை யுணர்ந்து அவனைப் பிரம்பாலடிக்கவும், அரசன், தேவர், மனிதர் முதலிய எல்லா உயிர்கள் முதுகிலும் அந்த அடிபட்டது. ஆளும் மறையவே, பாண்டியன் இத்திருவிளையாடலையும் மாணிக்கவாசகர் பெருமையையும் நன்குணர்ந்து அவரை வணங்கினான். மாணிக்கவாசகர் அமைச்சர் பதவியை நீத்துத் திருப்பெருந்துறை சென்றார்.

ஆங்கு மீண்டும் குருந்தமேவிய குரவரையும் குழாங்களையும் கண்டார். இறைவனும் ஆங்குள்ள குளத்தில் தோன்றும் சோதியிற் கலக்கும்படி குழாங்கட்கும், பல தலங்களையும் வணங்கி "கலமலிதில்லையுள், கோலமார்தரு பொதுவினில் வருகென" மாணிக்கவாசகருக்கும் கட்டளையிட்டு மறைந்தான். குழாங்களும் சோதியிற் கலந்தன. வாதவூரடிகள் உத்தரகோசமங்கை, இடைமருது, அண்ணாமலை, கழுக்குன்றம், காஞ்சி முதலிய பல தலங்களை வணங்கித் திருவாசகப் பாடல்களைப் பாடித் தில்லையில் வந்து திருக்கூத்தினை வணங்கி ஊருக்குப் புறம்பே ஓரிடத்தில் வசித்துவந்தார்.

சிவனடியார் ஒருவர் ஈழநாட்டில் "பொன்னம்பலம்" என்று கூறியிருந்துவந்தார். இதைக்கண்ட புத்தர்கள் பொறாதவர்களாய்த் தமது மன்னனிடம் தெரிவித்தனர். அரசன் அவ்வடியாரைத் தருவித்து, "பொன்னம்பலம்" என்பதின் வரலாற்றை யறிந்து தனது குருவோடும் ஊமைப் பெண்ணோடும் தில்லைப் பொன்னம்பலம் சென்று புத்ததேவரை ஆங்கு நிலைநாட்டும் உறுதிகொண்டு புறப்பட்டுத் தில்லையை யடைந்தான். புத்த குருவும் தில்லையிலுள்ளாரை வாதுக்கழைத்தான். இறைவன் தில்லை வாழந்தணர்கட்குக் கனவில் மாணிக்கவாசகரைக் கொண்டு புத்தரை வாதில் வெல்லுமாறு கட்டளையிடலும், மாணிக்கவாசகரும் சிற்சபையில் சோழமன்னனும் அந்தணரும் அறிஞரும் அமர்ந்திருக்க, புத்த குருவை நோக்கி "உன்வாதம் என்னை?" என வினவினார். அவன் தனது கொள்கைகளைக் கூறவே, இவர் சைவ உண்மையை எடுத்துரைத்து, புத்தவாதத்தை மறுத்தார். புத்தகுரு இதையுணராது, மீண்டும் தனது வாதத்தையே உரைக்க, மாணிக்கவாசகர் இறைவன் திருவருளை நினைந்தார். உடனே கலைமகள் புத்தர் வாக்கினின்றும் அகன்று அவர்களை யெல்லாம் ஊமர்களாக்கினாள்.' உடனே புத்த அரசன்

"பேசவாரா ஊமர்களாக்கினீர், என் ஊமை மகளைப்பேசவைத்தால் நானும் என் நாடும் சைவத்தை மேற்கொள்ளத் தடையில்லை" யென்றான். மாணிக்கவாசகர் அப்பெண்ணைப் பல கேள்விகள் கேட்க, அவைகட்குப் பிறவி ஊமையான அப்பெண், வாயால்பேசிப் பதில் கூறினாள். (இவற்றைத் தொகுத்து சுவாமிகள் "திருச்சாழல்" என்று அருளிச் செய்தார்.) பிறகு புத்த மன்னன் சைவனானான். அவன் வேண்ட சுவாமிகள் அருள் கூர்ந்து வாதுசெய்த புத்த ஊமர்களைப் பேசச்செய்தார். அனைவரும் சைவராயினர்.

பிறகு சிலகாலங்கழிந்த பின்னர், இறைவனே ஓரந்தண வுருக்கொண்டு, மாணிக்கவாசகரிடம் சென்று, தான் பாண்டி நாட்டிலிருந்து வந்ததாகக்கூறித் திருவாசகம் முழுமையையும் சுவாமிகள்சொல்ல, ஏடும் எழுத்தாணியுங் கொண்டு எழுதி, அகப்பொருட் கோவை சொல்லவேண்டுமென்று கூறலும், சுவாமிகள் சொல்ல, அதையும் எழுதிக் கொண்டு "மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது" என்று கைச்சாத்திட்டு சிற்சபையின் பஞ்சாக்கரப் படியிலே ஒருவருங் காணாதவாறு வைத்தனன். தில்லைவாழந்தணர் இவ்வேட்டை மாணிக்கவாசகருக்குக் காட்டி, இப்பாடல்களின் பொருளைத் தெரிவிக்கவேண்டினர். மாணிக்கவாசகரும் அவர்களை அழைத்துச் சென்று தில்லைத்திருக் கூத்தனைச் சுட்டி 'இவனே பொருள்' எனக் காட்டி அவன் திருவடியில் ஆனிமாமகத்திலே இரண்டறக் கலந்தனர்.

---

## ஆராய்ச்சிக் குறிப்புகள்

(1) **அடிகள் காலம்:**—கி. பி. மூன்றும் நூற்றாண்டு என்பது பலரும் ஒப்பமுடிந்த கொள்கை. அடிகள் ஏனைய மூன்று சமய குரவர்க்கும் முற்பட்டவரென்பதே பழைய வரலாறுகளிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. சில ஆண்டுகட்கு முன் சில அறிஞர்கள் திருத்தொண்டத் தொகையில் அடிகள் கூறப்படாமை, ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்த வரகுணனை அடிகள் திருக்கோவையார் ௬0௬, ௬௨௭-வது பாடல்களிற் கூறியுள்ளமை, மாயாவாதம், மும்மலம், ஆகமம் முதலிய சொற்களை அடிகள் உபயோகித்துள்ளமை, அடிகள் அருளிய செய்யுள் வகைகள் (கோவை, சதகம், அம்மானை, விருத்தம் முதலியன), "கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்," "ஒரு தோழன் தொண்டருளன்" என்று அடிகள் கூறினமை சம்பந்தரையும் சுந்தரரையும் குறிக்கும் என்பன போன்ற காரணங்கள் கூறி, அடிகள் காலம் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டென்கின்றனர். இக்காரணங்களை யெல்லாம் நன்காய்ந்து, கல்லாடத்தில் அடிகள் வரலாறுண்மை, "குடமுழ நந்தீசனை வாசகனைக் கொண்டார்" "நரியைக் குதிரை செய்வாரும்" "அணியார் வையைத் திருக்கோட்டினின்றதோர் திறமுந்தோன்றும்" என்ற அப்பர் வாக்குகள் அடிகள் வரலாற்றைக் குறிக்கின்றமை, மூன்றும் நூற்றாண்டில் மலையாளச் செப்புப்பட்டயமொன்றில் அடிகள் இந்திய கிறிஸ்தவரை மீண்டும் சைவராக்கிய செய்தி கூறப்பட்டமை, அடிகள் புத்தரை வாதில் வென்றதை இலங்கையிலுள்ள மகாவமிசம் என்ற சரித்திர நூல் கூறுதல், முதலிய பல காரணங்கள் காட்டி உயர் திருவாளர்கள் மறைமலையடிகள், கா. சுப்பிரமணியம் பிள்ளை, கி. கே. சுப்பிரமணிய முதலியார் ஆகிய மூன்று பேரறிஞர்களும் முறையே தங்கள் "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்", "மாணிக்கவாசகர் சரித்திரம்", "மாணிக்கவாசகர் அல்லது கீர்த்தார்பெருமை" என்ற உரை நடை நூல்களில் தாபித்துள்ளார்கள். அடிகள் ஏனைய மூன்று சமயகுரவர்க்கும் முற்பட்டு கி. பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்தவரென்பதே ஆராய்ச்சியில் துலங்கும் முடிபாகும்.

(2) **அடிகள் குலம்:**—இது ஆதிசைவ குலமென்று வடமொழி ஆலாஸ்ய மஹாத்மியமும், அமாத்திய குலமென்று ஏனைய பல வரலாறுகளும், ஐக்கியவாத சைவக்கன்னர் ஆராத்தியப் பிராமண குலமென்று சில நவீன ஆராய்ச்சி முடிபுகளும் கூறுகின்றன.

(3) **அடிகள் சமயம்:**—அடிகள் சைவசித்தாந்த சமய குரவருள் ஒருவர் என்று



சைவசித்தாந்திகளும், ஐக்கியவாத [illegible]று அடிகளை ஆராத்திய குலத்தவராக் கொள்வோரும் கூறுகின்றனர். பன்னிரு திருமுறைகளையும் பதினன்கு சாத்திரங்களையும் வகுத்த பெரியார்கள் கொள்கையே அறிவுக்குப் பொருத்தமுடையதாம்.

(4) **அடிகள் முற்பிறவி :**—கயிலையில் கணநாதராயிருந்தாரென்று திருவாலவாயுடையார் புராணங் கூறும். "குடமுழ நந்தீசனை வாசகனைக் கொண்டாய்" என்ற அப்பர் வாக்கும், "நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகைக் குரம்பையிற் புகப்பெய்து" என்ற அடிகள் வாக்கும் இதைக் குறிக்கும் என்பர் சிலர். கயிலைச் சாரலில் சித்தாயிருந்து கவனக் குளிகையை யிழந்து பூமிக்கு வந்து பாண்டியன் பொருளைச் சிவ தர்மத்துக் காக்குதல் முதலியன நிகழ்த்தி மீண்டனர் என்றும் சில புராணங்கள் கூறும்.

(5) **அடிகள் தாய்தந்தையர் :**—தாயின் பெயர் சிவஞானவதியென்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய திருப்பெருந்துறைப் புராணம் கூறும். தந்தை பெயர் சம்புபாதா சாரியர் என்று அப்புராணமும் சுந்தரநாதர் என்று வடமொழி ஆலாஸ்யமும் கூறும். ஏனைய புராணங்களில் இவர்கள் பெயர்கள் காணப்படவில்லை.

(6) **அடிகளுக்கு மனைவி மக்களுண்டா? :**—"முடித்தவாறும்........இங்கொருத்தி வாய், துடித்தவாறுந் துகிலிறையே சோர்ந்தவாறும்......"(திருச்சதகம்-௩௭) என்ற அடிகள் வாக்கு முதலியன கொண்டு மறைமலையடிகள் வாதவூரடிகட்கு மனைவி மக்களுண்டென்கிறார்கள். ஏனைய அறிஞர்களிற் சிலர் இதை மறுத்தும் பலர் வாளாவிருந்தும் வேறுபடுகின்றனர். பழைய புராண வரலாறுகளில் ஒன்றும் கூறப்படவில்லை.

(7) **அடிகள் பாண்டியன் பொருளைச் செலவிட்டதும் புத்தரை ஊமராக்கி வாதில் வென்றதும் அறச் செயல்களா ? :**—இவைகள் அறச் செயல்களே யென்று மேலே கூறிய மூன்று உரைநடை நூல்களிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

(8) **அடிகள் எந்தெந்த பாடல்களை எங்கெங்கு எவ்வெப்போது பாடினர்?:**—புராணங்களும், உரை நடை வரலாறுகளும் இதைப்பற்றிப் பல்வேறு வகையாகக் கூறுகின்றன. இப்பதிப்பில் பழைய பிரதிகளை யொட்டியே தலங்களும், பாடல்களின் உட்கருத்துக்களும் தலைப்புக்களில் குறிக்கப்பட்டுள்ளன.

(9) **அடிகள் திருக்கோவை பாடினரா? :**—பழைய வரலாறுகளும் மேற்கூறிய மூன்று நூல்களும் அடிகள் பாடியதாகவே கூறுகின்றன. சில ஆராய்ச்சியாளர் திருவாசகத்தை நோக்கத் திருக்கோவை சிறுமையுடையதென்றும், திருக்கோவை யியற்றிய சிவபாத்தியர் அடிகளல்லரென்றும் கூறுகின்றனர். அடிகள் கி. பி. ௯0-ம் நூற்றாண்டினரென்போர் வரகுணன் செய்தி, செய்யுளமைப்பு முதலியவைகட்காக அடிகள் கோவை யியற்றினரென்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

(10) **அடிகள் திருவாக்கு :**—இதில் அடிகள் வரலாற்றுக்குரிய அகச்சான்றுகள் நிரம்பியுள்ளன. "எங்கள் திருப்பெருந்துறை மேவினன், காயத்துள் அமுதூறவூற நீ கண்டு கொள் என்று காட்டிய, சேய மாமலர்ச் சேவடி" (சென்னிப்பத்து - ௫) "நாயினேனை நலமலிதில்லையுள், கோலமார் தருபொது வினில் வருகென" (கீர்த்தித் திருவகவல் - ௧௨௭,௧௨௮), "நரியைக் குதிரைப் பரியாக்கி......மதுரை யெல்லாம் பிச்சதேற்றும்......" (ஆனந்த மாலை - ௭), "மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு, புண் சுமந்த பொன்மேனி பாடுதுங் காண் அம்மானாய்" (திருவம்மானை - ௮) என்பன போன்ற பல பகுதிகளில் இச்சான்றுகள் அமைந்துள்ளன. பதியிலக்கணம், பாச இலக்கணம், பசு விலக்கணம், பசுத்தன்மை கெடுதல், குருவின் உபகாரம், இருவினை யொப்பு, மலபரி பாகம், சத்திநிபாதம், அடியாரிலக்கணம் முதலிய பல சைவசித்தாந்த சாத்திரப் பகுதிகட்கும் அடிகள் திருவாக்கில் ஆதாரங்கள் பலவுள. நயங்கள், அணிகள், உவமைகள், சுவைகள், பழமொழிகள் முதலியன அடிகள் வாக்கில் செறிந்துள்ளன. இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கடவுள் வடிவாகவும் சத்தி சிவமயமாகவும் உவமித்து விவரித்தலில் அடிகள் வல்லுநர். விளையாடல்களில் கடவுளுணர்ச்சியைப் புகுத்திப் பூவல்லி, அம்மானை, கோத்தும்பி போன்ற பாடல்களைப் பாடுவதிலும் அடிகளை ஒப்பாரிலர். சுருங்கக் கூறின் அடிகள் திருவாக்கு மெய்யுணர்வையும், உள்ளக் கனிவையும், முத்தியையும் நல்கும் பெற்றியுடையதென்று கூறலாம்.

# மறைஞான சம்பந்தர்

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை திருவாரூர் - சோமசுந்தர தேசிகர்.]

**த**மிழ்த் தாய் மகனும், தமிழுக்கே தொண்டு பூண்டு வருபவர்களுமான திரு. அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள் பழந்தமிழ் நூலாசிரியர் ஊர் பெயர் முதலிய விவரங்கள் மாறுபட்டுக் கிடக்கின்றன வென்றும், அவற்றைத் தமிழர் ஒருவழிப்படுத்த முயலல்வேண்டுமென்றுங் கூறி, அதற்கு எடுத்துக்காட்டாக மறைஞான சம்பந்தரைக் குறித்துச் சில செந்தமிழ்ச் செல்வி 5 : 12, 6 : 1 பகுதிகளில் எழுதினார்கள். அம் மறைஞான சம்பந்தரைப்பற்றிப் பின்னும் காணப்படுவனவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன்.

1. மறைஞான சம்பந்தர், 2. கடலூர் மறைஞான சம்பந்தர், 3. மறைஞான சம்பந்ததேசிகர், 4. மறைஞான சம்பந்தநாயனார், 5. சிதம்பரம் மறைஞான சம்பந்ததேசிகர், 6. சிதம்பரம் மறைஞான சம்பந்தநாயனார், 7. மறைஞான தேசிகர், 8. திருமறை ஞானதேசிகர் எனப் பல பெயர் நூல்களிற் காணப்படுகின்றன.

மறைஞான சம்பந்தர் என்ற பெயரைப்பற்றிக் காணப்படும் செய்திகள் பல. அவற்றையும் ஈண்டு குறிக்கின்றேன் :—

திரு. அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள், மேற்குறித்த பத்திரிகையிலே "சிவஞானசித்தியார் உரையியற்றிய மறைஞானசம்பந்தர் ஒருவர்; சிவதருமோத்தரம் அருணகிரிப் புராணம் முதலியன இயற்றியவர் வேறு ஒருவர்" என முடிவுகட்டினார்கள். பின்னவர் சிதம்பரம் குகைமடத்தில் வாழ்ந்து வந்தவர் என்றும் எழுதினார்கள். இவர்கள் இருவரும் வேறு என்று அவர் கூறுவதற்கு, ஆதாரம் வாமதேவ முருகப்பட்டாரகர் அச்சிட்ட அருணகிரிப் புராணமாகும். இந்நூல் கலி 4655-க்குக் கி. பி. 1553-ல் மறைஞான சம்பந்தரால் இயற்றப் பெற்றதென்று அதன் பாயிரத்தால் அறிகின்றோம்.

தஞ்சை சரசுவதி மஹால் என்னும் புத்தக நிலையத்திலுள்ள தமிழ்ப் புத்தகப் பட்டி எழுதிய திரு. L. உலகநாத பிள்ளையவர்கள். 1. பரமோபதேசம் 2. சிவமயம் 3. கமலாலயபுராணம் 4. சிவதருமோத்தரம் 5. பதி பசுபாசப் பனுவல் 6. சங்கற்ப நிராகரணம் 7. முத்திநிச்சயம் என்ற நூல்களை இயற்றியவர் மறைஞானசம்பந்தர் என்றும், இவர் கமலாலயபுராணம் இயற்றிய காலம் கலி. 4677-க்கு கி. பி. 1545 என்றும் எழுதியிருக்கின்றார்கள்.

'செய்யுள் விளக்கம், ஆதிகமலாலய மகாத்மியம், சிவமயம், பதிபசு பாசப் பனுவல், சைவசமயநெறி, பரமோபதேசம், பரமத திமிர பானு, சங்கற்ப நிராகரண உரை, சகலாகம சாரமுதலியவற்றை இயற்றியவரும் திருக்காளத்தி பண்டாரத்தின் சிஷ்யரும், தருமபுர ஆதீன மடத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரானாற் செய்யப்பட்ட ஞானாபரண விளக்கமென்னும் சித்தியார் விருத்தியுரை, முத்தி முடிபு உரை முதலியவற்றிற் புகழ்ந்து பேசப்படுபவரும், இவ்வுலக வாழ்வில் வெறுப்புற்றுத் தமது கண்ணைத் துணியால் மறைத்துக்கொண்டிருந்த காரணத்தாற் கண்



கட்டி மறைஞான சம்பந்தரென வழங்கப்பெறுபவரும், சிதம்பரம் குகை மடத்தலைவருமாகிய மறைஞான சம்பந்தரென்னும் பெரியார் இந்நூலை இற்றினாரென்பர்' என்று அரசாங்க புத்தகநிலையப் பட்டி மூன்றாந் தொகுதி 1130-வது பக்கத்திற் காணப்படுகின்றது.

'மறைஞான சம்பந்தருடைய வாசஸ்தானம் சிதம்பரம். நிலை துறவு. வடமொழி தென்மொழி என்னும் இருமொழியிலும் வல்லார். சைவாகமங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் தேவாரம் முதலியவைகளையும் நன்குணர்ந்தவர். ஆகம சாரங்களை எடுத்துத் தமிழிற் பெயர்த்துப் பல நூல் செய்தவர். அந்நூல்கள் சிவதருமோத்தரம், சைவசமய நெறி, சங்கற்ப நிராகரணம் முதலியன. இவரும் வேறே சந்தான குரவராகிய மறைஞான சம்பந்தரும் வேறே என்பர். இவை ஒருவர் சொன்னவை' என்பர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமது தமிழ்ப்புலவர் சரித்திரத்தில்.

சிவராத்திரி கற்பம் என்ற நூலை யச்சிட்ட ஈக்காடு இரத்தின முதலியார் அப்புத்தக முகவுரையில் மறைஞான சம்பந்தநாயனார் வேளாளரென்றும், 1. சிவஞான சித்தியார் உரை, 2. சைவசமய நெறி, 3. பரமததிமிர பானு, 4 சங்கற்ப நிராகரணம், 5. இறைவ னூற்பயன், 6. பஞ்சாக்கரமாலை, 7. சிற்றம்பல நாடிமாலை, 8. மஹாசிவராத்திரி கற்பம், 9. மாத சிவராத்திரி கற்பம், 10. சோமவார சிவராத்திரி கற்பம், 11. சோமவார கற்பம், 12. வருத்தமற வுய்யும்வழி, 13. உருத்திராக்க விசிட்டம், 14. திருக்கோயிற் குற்றம், 15. அருணகிரிப் புராணம், 16. சிவதருமோத்தரம் ஆதிய நூல்களெல்லாம் இயற்றினவரென்றும் எழுதியிருக்கின்றார்.

சிவஞான சித்தியார் அறுவருரைப் பதிப்பில் அதன் பதிப்பாசிரியர் 'திருமறை ஞானதேசிகர் சீகாழிப்பதியில் திருஞானசம்பந்தமூர்த்திகளின் திருவடியார்களில் வள்ளல்கள் அறுபத்து நால்வருள் ஒருவராகிய ஆளவந்த வள்ளல் சந்தானத்தைச் சேர்ந்தவர்; பிராமண குலத்தவர்; வைதிக சைவ பரிபாலகர்; பரமததிமிரபானு முதலிய நூல்களை யியற்றியவர்; பதி பசு பாசப்பனுவல் முதலிய நூல்களுக்கு உரையியற்றியவர். இவர் இந்நூற்கு (சித்தியாருக்கு)க் காண்டிகை உரை கண்ணழிவுரையென இரண்டுரை யியற்றினர். அதனுள் இஃது காண்டிகையுரை. இவ்வுரையே இந்நூற்கு முந்திய வுரையென்பது பிந்திய வுரையாசிரியர்கள் கொண்டிருப்பதை அவ்வவர் 'சமவாத' மறுப்பு முகவுரைகளாற் றெள்ளிதிற் றெளியலாகும் என்று எழுதினர்.

இவ்வளவே யானறிந்தவரை மறைஞான சம்பந்தரைப்பற்றிக் கிடைக்கும் செய்திகள்.

சைவசமயத்தை வளர்த்தவர்களான சந்தான குரவர் நால்வருள் உமாபதி சிவாசாரியாரின் ஆசிரியரான மறைஞான சம்பந்தர் ஒருவர். இவரது ஊர் கடலூரென்று சிலரும், திருப்பெண்ணாகட மென்று சிலரும் கூறுவர். கொற்றவன்குடிப் பெரியாரது ஆசிரியர் ஒரு மறைஞான சம்பந்தரென்பது உண்மை, சிவப்பிரகாசமென்னும் வழிநூல் ஆசிரியராம் உமாபதிசிவம் ஒரு

நாள் கோயிற் பூசையை முடித்துக்கொண்டு வெளியில்வந்து சிவிகையிவர்ந்து செல்லுங்கால், அங்கு ஐயமெடுத்துவந்த பெரியார் ஒருவர் ‘பட்ட கட்டையில் பகற்குருடேகுது பாரீர்’ என்றலும், இவ்வாசகத்தைக் கேட்ட அடிகள் பக்குவகாலம் வந்தமையின் சிவிகை விட்டிறங்கி அவ்வடிகளைவழிபட்டு உய்ந்தார் என்பது அடிப்பட்ட சான்றோர் கூற்று. இப்பெரியாரே மறைஞான சம்பந்தரென்பர். இவரது ஊர் முதலிய விவரம் ஒன்றும் புலப்படவில்லை. எனினும் மேற்காட்டிய அடைவிற் கண்ட மறைஞான சம்பந்தர், கடலூர் மறைஞான சம்பந்தர் என்ற இருபெயரும் இக்குரவரையே குறிக்கும். இப்பெரியாரதுகாலம் உமாபதிசிவத்தின் காலமான சாலியவாகனசகம் 1235—கி. பி. 1313க்கு முற்பட்டதாகும். ஆகவே பதின்மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்தவரென்று கொள்ளுதல் தவறாகாது.

‘பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோதும்’

என்ற மேன்மையுடைய சிவஞான சித்தியாருக்கு உரையியற்றியவருள் முதல்வராகக் கருதப்படுபவர் ஒரு மறை ஞானசம்பந்தர். இவரைப்பற்றி மேற்கூறிய சித்தியாருக்கு உரை வகுத்த சாலிவாடிபுர நிவாஸி ஞானப்பிரகாசர், ‘திருமறை ஞானதேசிகர் ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரிய ரென்னுமிவர் சிவஞானசித்திக்குச் செய்த உரைகள்......’ என்று எழுதிச் செல்கின்றார். மேலும் மறைஞானரது உரை முடிவிலே,

நிலையடைய வனுதினமு நினையெனது மனமே
தொலைவிலரு டருமகலு மலமுமுறு துயரு
மலையுடைய வுனதுமட மதியுடைய வருளு
மூலவின்மறை ஞானமுனி வுரைசெய்திரு மொழியே.

என்றொரு செய்யுள் காணப்படுகின்றது. இவைகளால் உரையாசிரியருக்கு மறைஞான தேசிகர் என்றும் மறைஞான முனிவர் என்றும் வழங்கி வந்ததென்று தெரிகிறது. முன்னதிற் காணப்படும் ‘திரு’ என்பது ஸ்ரீ என்பதுபோன்ற உபசார அடைமொழி. இவரைப்பற்றிய வரலாறு ஒன்றும் கிடைத்திலது. வேறு நூல்களும் செய்ததாகத் தெரியவில்லை. அடைவிற் கண்ட மறைஞான தேசிகர், திருமறை ஞான தேசிகர், என்பன இவரையே குறிக்கும்.

இனி, சிவதருமோத்தரம் இயற்றிய பெரியரான மறைஞான சம்பந்தர் ஒருவர், இவர் சிதம்பரத்திலே வாழ்ந்தவரென்றும், இவர் யாது காரணத்தாலே உலகத்தவரைப் பாராது தமது இரு கண்களையும் துணிகொண்டு இறுகக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தனரென்றும், இவர் வாழ்ந்த விடத்திற்குக் ‘கண்கட்டி மடம்’ என வழங்கிவந்ததென்றும், அம்மடம் கூத்துகந்தபெம்மான் குடிகொண்டருளும் திருத்தில்லையிலே தெற்கு வீதியும் கீழ் வீதியும் கூடுமிடத்திலிருந்ததென்றும், சிலவாண்டுகட்கு முன்னர் அது இடிக்கப்பட்டதென்றும் அறிஞர் கூறுவர்.

(தொடரும்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத் திரட்டு உரை

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.,]

மாஜி தாசில்தார், சிந்துபூந்துறை, திருநெல்வேலி.

(உரிமை ஆக்கியோருடையது)

[இது உண்மை அன்புடன் தேவாரத் திருமுறையை ஓதும் எல்லா நன்மக்களுக்கும் பணிவுடன் அர்ப்பணம் செய்யப்படுகின்றது. இத்தேவார உரைகளில் பிழை காணும் அன்பர்கள் காரணத்துடன் எனக்கு நேரில் தெரிவிக்கும்படி நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கூறப்படும் பிழை உரைகள் திருத்தவும் அல்லது மாற்றவும் அல்லது விளக்கவும் படும்.—மா. வே. நெ.

குறிப்பு:—இவ்வுரையைப் பற்றிய கடிதப் போக்கு வரவை இவ்வுரையாசிரியரோடு நேரே வைத்துக்கொள்ள வேண்டும்.—பத்திராசிரியர்.

(இதழ் 4, 120-ம் பக்கத் தொடர்ச்சி)

பழுதில கடல்புடை தழுவிய படிமுத லியவுல குகண்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள் குலமலி தருமுயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர் தொழுமவர் புகழ்மிகு முலகிலே. அ

(உரை) பழுதில கடல்புடை தழுவிய - குற்றமில்லாத ஏழு கடல்களும் பக்கத்திற் சூழ்ந்திருக்கிற; படிமுதலிய மலி உலகுகள் - நில உலகம் முதலிய நிறைந்த உலகங்களில்; குழுவிய சுரர் பிறர் மனிதர்கள் குலம்மலி தரும் உயிரவை அவை முழுவதும் - கூட்டமாயுள்ள தேவர்கள் வகையிலும் அவர்களுக்கு வேறாயுள்ள மனிதர்கள் வகையிலும் கூட்டமாய் நிறைந்துள்ள உயிர்த் தொகுதிகள் அனைத்தும்; அழிவகை நினைவொடு - அழிதல் வேண்டும் என்ற எண்ணத்துடன்; முதல் உரு இயல்பரன் உறைபதி - முதல்வனது வடிவம் கொள்கின்ற உருத்திரன் எழுந்தருளியிருக்கின்ற தலமாகிய; செழுமணி அணி சிவபுரம் நகர் - ஒளி நிறைந்துள்ள மணிகளால் அழகு செய்யப்பட்டிருக்கிற சிவபுரம் என்ற நகரை; தொழுமவர் புகழ் - தொழுகின்றவர்களுடைய புகழ்; உலகில் மிகும் - உலகில், மேலும் மேலும் வளர்ந்தோங்கும்.

(விளக்கம்) பழுதில கடல் - கடல் - சாதி யொருமையாய்ப் பல கடல்களைக் குறிக்கின்றது. அதனால் இல என்ற பன்மைச் சொல் அதனைக் கொண்டு முடிந்தது. பழுதில கடல் என்றதனால் நாம் கண்ணால் காணும் பழுதுள்ள உப்புக் கடல் விலக்கப்பட்டது. நாம் ஊனக் கண்ணால் பார்க்க முடியாத பாற்கடல் முதலிய ஏழு கடல்களும் குறிக்கப் பட்டன. அழிவகை நினைவொடு - இறைவன் நினைப்பினாலே மாத்திரம் அழித்தற் றொழிலைச் செய்கின்றான் என்பது கூறப்பட்டது. நம் போன்று அவன் கருவி கரணங்களால் ஒன்றனையுஞ் செய்வதில்லை. உயிர் அவை அவை முதல் உரு இயல் பரன் - முதலாவது அவை - உயிரொடு சேர்ந்த பகுதிப் பொருள் விகுதி. இரண்டாவது அவை - தொகுதி என்னும் பொருளில் வந்தது. உருவம் ஒன்றுமில்லாத சுத்த சிவம், முதலாவது உருக்கொள்கிற உருத்திர மூர்த்தி. பரன் - மேலானவன்.

உருவங் கொள்கிற மூர்த்திகளில் மகா உருத்திரன் மேலானவன் ஆதலில் பரன் என்றார். அவனே மகா சங்கார காலத்தில் எல்லா உலகங்களையும் அழிக்கிறவன். செழுமணி - மணிக்குச் செழுமை ஒளி ஆதலின் ஒளி நிறைந்துள்ள மணி எனப் பொருள் உரைக்கப் பட்டது.

தாங்கருங் காலந் தவிரவந் திருவர் தம்மொடுங் கூடினாரங்கம்
பாங்கினாற் றரித்துப் பண்டுபோ லெல்லாம் பண்ணிய கண்ணுதற் பரமர்
தேங்கொள்பூங் கமுகு தெங்கிளங் கொடிமாச்செண்பகம்வண்பலாவிலுப்பை
வேங்கைபூ மகிழால் வெயிற்புகா வீழி மிழலையா னெனவினை கெடுமே. கூ

(உரை) தம்மொடும் கூடினார் இருவர் அங்கம் - தம்மொடு சேர்ந்திருக்கிறவர்களாகிய அயன்மால் என்ற இரண்டு தேவர்களுடைய உடல்களை ; தாங்கருங் காலம் தவிர்ந்தபின் - அவர்கள் தாங்க முடியாத காலம் கழிந்த பின் ; பாங்கினால் தரித்து - (உயிர்களுக்கு நலம் உண்டாகும்படி தாம் தரித்துக்கொண்டு ; பண்டுபோல - அழிப்புக் காலத்துக்குமுன் இருந்தபடி ; எல்லா உலகங்களையும் பண்ணிய கண்ணுதற் பரமர் - எல்லா உலகங்களையும் படைத்த நெற்றிக்கண் உடைய சிவபெருமானே ; தேங்கொள்பூங் கமுகு (ஆல) - மதுர மான பூக்களை உடைய கமுக மரங்களாலும் ; தெங்கு இளம் கொடிகள் (ஆல) - தென்ன மரங்களாலும் (படர்கின்ற) இளங் கொடிகளாலும் ; மா செண்பகம் வண்பலா இலுப்பை வேங்கை பூ மகிழால் - மா மரங்கள் செண்பகமரங்கள் செழிப்பான பலாமரங்கள் இலுப்பை மரங்கள் வேங்கை மரங்கள் பூக்கள் உடைய மகிழமரங்கள் ஆகிய இவைகளாலும் ; வெயில் புகா வீழிமிழலையான் என - பகலோன் வெயில் உள்ளே புகாமலிருக்கின்ற திருவீழி மிழலையில் எழுந்தருளி யிருக்கின்றவன் என்று ஒருவன் சொல்ல ; வினை கெடும் - அவன் செய்த இருவினைகளின் பலன் அவனை அடையாமற் போகும்.

(விளக்கம்) தம்மொடுங் கூடினார் இருவர் - படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில்களில் அயன் படைத்தலையும் மால் காத்தலையும் செய்கிற கடவுளர் ஆதலின் அவர்களை அழித்தலைச் செய்கிற "கண்ணுதற் பரமரொடுங் கூடினார்" என்றார் ; தாங்கரும் காலம் தவிர - என்றதனால் அயன்மால் கடவுளர்கள் பிரகிருதி மாயையில் அன்றி சுத்த மாயையிலாவது அசுத்த மாயையிலாவது உடல் தாங்கக் கூடியவர் அல்லர் என்பது பெறப்படுகின்றது. வைணவ சமயமும் பிரகிருதி மாயைக்கு மேலுள்ள தத்துவங்களைக் கூறவில்லை. இருவர் அங்கம் பாங்கினால் தரித்து - கண்ணவனாய் உலகெலாம் காக்கின்றானே என்றும் வேதனாய் வேதம் விரித்திட்டானே என்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சோற்றுத் துறைத் திருத்தாண்டகத்தில் கூறியருளினர். கண்ணுதற்பரமர் திருவீழிமிழலையான எனக் கூற என்று முடிக்க. பரமர் - மேலானவர் ; தனிமுதற் கடவுள் நுதற்கண் - அருளைக் குறிக்கின்றது. ஏ - ஈற்றசை.

புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநில னினில்நிலை பெறுவரே. க0

(உரை) புவம்வளி கனல்புனல் புவி - வான், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய ஐம் பெரும் பூதங்களில் ; கலை உரை மறை - (அறுபத்து நான்கு) கலைப் பொருள்களையும் உரைக்கின்ற மறை நூல்கள் கூறுகிறபடி ; திரிகுணம் அமர்நெறி - தாமதம் இராசதம் சாத்துவிகம் என்னும் மூன்று குணங்களும் தங்கித் தொழிற்படுகின்ற முறைமையில் ; திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரும் உயிரவை அவை - தேவலோகத்தில் பொருந்தி வாழ்கின்ற தேவர்கள் (நில உலகத்தில் வாழ்கின்ற மனிதர்கள்) முதலிய உயிர்த் தொகுதி



கள் ; தமபவமலி தொழிலது நினைவொடு - தங்களுடைய பிறவிகளில் (வாழ் நாள்களில்) நிறைந்திருக்கும் உலக நுகர்வுப் பொருள்களை விரும்பும் செயலை மனதில் நினைந்து கொண்டு ; பதுமம் நன்மலரது மருவிய - தாமரை நற்பூவில் வீற்றிருக்கின்ற (அயனாகிய); சிவனது சிவபுரம் நினைபவர் - சிவபெருமான் (தன்னை மக்கள் வணங்கி உய்யும்படி திருமேனி கொண்டிருக்கின்ற) திருச்சிவபுரத்தை (உள்ளத்தில்) நினைத்துக் கொண்டிருக்கும் மக்கள் ; செழும் நிலனினில் நிலைபெறுவர் - வளம் பொருந்திய நில உலகத்தில் (உலக நுகர்வுப் பொருள்களுடையவர்களாய்) சிறப்புடன் நிலைபெற்று வாழ்வார்கள்.

(விளக்கம்) இந்தத் தேவாரப் பாட்டுச் சிவபெருமான் அயனை அதிட்டித்து (நிலைக் களமாகக்கொண்டு செலுத்தி) நின்று செய்யும் படைத்தற் றொழிலைக் குறிக்கின்றது. "சிவனாகித் திசை முகனாய்த் திருமாலாகி" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருத் தலையாலங்காடுத் திருத்தாண்டகம் ௩-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. புவம்வளி கனல் புனல்புவி திரிகுணம் அமர்நெறி - மூலப்பகுதியிலிருந்து உண்டான பிரகிருதி மாயா தத்துவங்கள் முழுவதும் முக்குண உருவங்களாயினும் அத்தத்துவங்களில் ஐம் பெரும் பூதங்கள் மிகத் தடித்த தத்துவங்கள் ஆதலின் புவம்வளி கனல்புனல் புவி திரி குணமமர்நெறி என்றார். தாமதம் இராசதம் சாத்துவிகம் என்னும் முக்குணங்களில், பரு உடலையே தாம் என்று உணரும் - மக்கள் பெரும்பான்மை தாமத இராசத குணங்களின் வயப்பட்டுத் துன்பத்தையும் மோகத்தையும் சிறுபான்மை சாத்துவீகம் வயப் பட்டு உலக இன்பத்தையும் அடைந்து உழல்வர். உயிர் அவை அவை - முதலில் வரும் அவை பகுதிப் பொருள் விகுதி; உயிர் சாதி யொருமை. இரண்டாவது அவை தொகுதி என்று பொருள்படும். தமபவம் - தம - தம்முடைய. அ - ஆறும் வேற்றுமைப் பன்மை உருபு. பவம் - சாதி யொருமை. பவம்-பிறப்பு. பவ மலிதொழிலது நினைவொடு உயிர்கள் உலக நுகர்வுகளை விரும்பும்படி இறைவன் மனதால் நினைக்காவிட்டால் உயிர்களுக்கு நுகர்வுகளில் விருப்பம் உண்டாகாது. அது ஆறும் வேற்றுமை உருபு. பதும நன் மலர் அது - தாமரை உலகினைக் குறிக்கின்றது ; தத்துவங்களாலாகிய உலகம் நாளம் இதழ் மகரந்தம் பொருட்டு வீசம் முதலிய பகுதிகளை உடைய தாமரை மலர் போன்றிருத்தலின் அயனைத் 'தாமரைப் பூமேலவன்' எனப் புராணங்கள் கூறுகின்றன. உலகினைப் படைத்தற்கு அயன் உலகில் நிறைந்திருக்க வேண்டியது, இன்றி அமையாது ஆதலின் 'பதும நன்மலரது மருவிய' என்றார். அது பகுதிப் பொருள் விகுதி. சிவன் - என்பது இங்கே அயனை அதிட்டித்து நின்று படைத்தற் றொழிலைச் செய்கின்ற சிவன். சிவபுரம் நினைபவர் - நினைத்தலாவது: சிவன் பவம் மலி தொழிலை நினைக்கும் நினைப்புக்கு இணங்க அவனை அற வழியில் நின்று வழிபடுதல். நிலனினில் நிலை பெறுவர் - நிலனினில் நிலை = நிலன் + இன் + இல் + நிலை. இன் - சாரியை. இல் - ஏழாம் வேற்றுமை உருபு. ஏ - ஈற்றசை.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தியாகி [யாகி
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே
நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிக ணின்றவாறே. கக

(உரை) நிமிர் புன் சடை அடிகள் - நிமிர்ந்திருக்கின்ற சிறிய சடைகளையுடைய சிவபெருமான் ; இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி (உம) - பெரிய மண், தீ, நீர் ஆகியும்; இயமானனாய் எறியும் காற்றும் ஆகி (உம்) - உயிர், வீசுகின்ற காற்று ஆகியும், அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி (உம்) - (மக்களால்) காணுதற்கு முடியாத நிலைகளையுடைய திங்கள், ஞாயிறு ஆகியும் ; ஆகாசமாய் அட்டமூர்த்தி ஆகி (உம்) - வான் ஆகியும் (இவ்வாறு) எட்டு உருவங்களை உடையவனாகியும் ; பெருநலமும் குற்றமும் (ஆகியும்) - பெரிய நன்மையாகிய வீட்டின்பமும் (அருள் ஆணவ மலத்துடன் பொருந்தி

நின்று அதனை இயக்கி திரோத மலமாய் நின்று உயிர்களைக் கட்டுறுத்தும்) கட்டு ஆகிய குற்றமும் ஆகியும்; பெண்ணும் ஆணும் (ஆகியும்) - பெண் உருவம் ஆண் உருவம் ஆகியும்; பிறர் உருவும் தம் உருவும் தாமே ஆகி (உம்) - பிற உயிர்களுடைய உருவங் களும் தாம் கொள்ளுகிற உருவங்களும் தம்மை அன்றி நிலைபெறுவன அல்லவாகியும்; நெருநலையாகி இன்றாகி நாளை ஆகி (உம்) - சென்றகாலம் நிகழ்காலம் வருங்காலம் ஆகிய மூன்று காலங்களாகியும்; நின்ற ஆறு (உடையர்) - (உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்ய) நிற்கின்ற தன்மையை உடையர். அவருடைய பேரிரக்கம் தான் என்னே! என்பது குறிப்பெச்சம்.

**(விளக்கம்)** இந்தத் தேவாரப் பாட்டின் முன் இரண்டு அடிகளும் சிவபெருமான் எட்டு உருவங்களுடையன் (அட்டமூர்த்தி) என்று கூறுகின்றன. மண் புனல் கனல் வளி வெளி ஞாயிறு திங்கள் உயிர் என்ற முறைமையிற் கூறப்பட வேண்டிய எட்டு உருவங்களும், செய்யுள் ஆதலின் முறை பிறழ்ந்து கூறப்பட்டன. பெருநலமும் குற்றமும் - நன்மைகள் எல்லாவற்றினுள்ளும் சிறந்த நன்மை வீட்டின்பம் ஆதலின் வீட்டின்பம் எனப் பொருள் உரைக்கப் பட்டது. இந்த இன்பம் நிலையாயுள்ளது. ஆதலின் பெருநலம் என்றார். குற்றம் என்பது இங்கே கட்டு (பந்தம்) ஆகிய குற்றத் தைக் குறிக்கின்றது. இக்குற்றம் உயிர்களை விட்டு முடிவில் நீங்கக்கூடியது. மாணிக்க வாசக சுவாமிகள் திருப்பொற்சுண்ணம் இறுதிப் பாட்டில் சிவபெருமானை, "பாதமும் வீடுமாயினார்" எனக் கூறியருளினமை காண்க. பெண்ணும் ஆணும் - உலகில் எல்லா உயிர்ப் பொருள்களும் ஆண், பெண் உருவங்களாய் நிற்றலுக்கு ஏற்ப சிவபெருமா னுடைய ஆற்றல் (சக்தி) அவனிடமிருந்து வெளிப்பட்டு உலகிற் பலவாருய்த் தொழிற் படும் பொழுது பெண்ணாகக் கூறப்பட்டுள்ளது. உயிரில் பொருள்களும் ஒரு பகுதி ஆண் குணங்களை உடையனவாயும், மற்றொரு பகுதி பெண் குணங்களை உடையனவா யும் உள்ளன. "சத்தியுஞ் சிவமுமாய்த் தன்மை யிவ்வுலக மெல்லாம் - ஒத்தொவ்வா வாணும் பெண்ணு முயர்குண குணியுமாகி - வைத்தனன்" என்று சிவஞான சித்தியா ரிற் கூறப்பட்டிருத்தல் காண்க. நெருநலை = நெருநல் + ஐ. ஐ சாரியை. நெருநல் - நேற்று, முன்னை நாள். நெருநலையாய் இன்றாகி நாளையாகி - இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூன்று காலங்களில் கூறப்படும் நிகழ்ச்சிகள் கால தத்துவத்தைச் சார்ந்துள்ளன. உலக நிகழ்ச்சிகளெல்லாம் கால தத்துவத்தைப் பற்றியே நிகழ்கின்றன. அக்கால தத்து வத்தை இயக்குகிறவன் சிவபெருமான் ஆதலின் அவன் மூன்று காலங்களுமாயினான் எனக் கூறப்பட்டனன். நின்ற ஆறு - சிவபெருமான் இவ்வாறு நிற்றல் இயல்பு ஆத லின் நிற்கிற ஆறு, என முக்காலத்து மொத்தியல் நிகழ்காலத்துக் கூறற்பாலது. நின்ற ஆறு என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. (நன்னூல் பொதுஇயல் ௩௩-வது சூத்தி ரம்.) ஆறு - தன்மை. அடிகள் நின்ற ஆறு உடையர் என முடிக்க. உடையர் - சொல் லெச்சம். ஏ - ஈற்றசை.

> மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
> வீசுங்கால் தன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்
> தன்னுருவின் மூன்றாய்த் தாழ்புனலி னான்காய்த்
> தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்சம்
> மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
> வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
> பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
> போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. ௧௨

**(உரை)** மின்னுருவை - மின்னல்போல் மிளிர்கின்ற விந்து உருவமாகியும்; விண் அகத்தில் ஒன்றாய் - விண்ணில் (ஆகாயத்தில்) ஓசை குணம் ஒன்று மாத்திரம்



ஆகியும்; மிக்கு வீசுங்கால் தன் அகத்தில் இரண்டாய் - காற்று மிகுதியாய் அடிக்கும் பொழுது அதனிடத்தில் ஓசை, ஊறு என்ற இரண்டு குணங்கள் ஆகியும்; செந்தீத் தன்னில் மூன்றாய் - செந்நிறமுள்ள தீயில் ஓசை, ஊறு, உருவம் என்ற மூன்று குணங்களாகியும்; தாழ் புனலில் நான்காய் - (நிலத்தில்) படிந்து ஓடுகின்ற நீரில் ஓசை, ஊறு, உருவம், சுவை என்ற நான்கு குணங்களாகியும்; தரணி தலத்து அஞ்சாகி - மண்ணில் ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்ற ஐந்து குணங்களாகியும்; வான் பவளக் கொழுந்தை முத்தை வயிரத்தை - மேலான பவளத்தைப் போலவும் முத்தைப் போலவும் வயிரத்தைப் போலவும் ஒளிர்கின்ற உருவம் ஆகியும்; மாசொன்று இல்லாப் பொன் உருவை - குற்றமில்லாத பொன்போல் மிளிர்கின்ற உருவம் ஆகியும்; எஞ்சாத் தஞ்சம் மன் உருவை - (இவ்வாறு உலகிலே ஒளிரும் உருவப் பொருள்களுக் கெல்லாம்) எஞ்ஞான்றும் நீங்காத புகலிடமாயுள்ள நிலையான நாத ஒளி உருவமாகியும்; வளர் ஒளியை - (மேலே கூறிய உயிரில் பொருளில்களில் அன்றி உயிர்ப் பொருள்களில்) மேலும் மேலும் மிகுந்து ஒளிர்கின்ற ஒளியாகியும்; புள்ளிருக்கு வேளூரானை - திருப் புள்ளிருக்கு வேளூர் என்ற வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளி யிருப்பவனும் ஆகிய சிவபெருமானை; போற்றாதே - (நான்) வணங்காமல்; ஆற்ற நாள் போக்கினேன் - நீண்ட காலம் வீணாகக் கழித்தேன்.

**(விளக்கம்)** மின் உருவை - மின் என்பது இங்கே விந்து ஒளியைக் குறிக்கின் றது. திருமந்திரம் ஏழாந் தந்திரம் சமாதிக்கிரியை ௫௦-வது பாட்டில் "மின்னொத்த விந்து நாதாந்தத்து விட்டிட" என்ற தொடர்மொழி, மின்னல் உருவம் விந்து என் பதை உணர்த்துகிறது. நுண்ணிய விண்ணில் ஒளியாய் விளங்குவது தடித்த காற்று முதலிய பூதங்களில் ஒலியாயும் விளங்குகின்றது. விண்ணகத்தில் ஒன்றாய்......தரணி தலத்து அஞ்சாகி - சிவபெருமான் விண் முதல் நிலம் வரை உள்ள ஐம்பெரும் பூதங்களி லும் முறையே ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் ஆகிய ஒன்றுக்கொன்று ஏறி வரும் குணங்களை உடையன். இதனை மாணிக்கவாசக சுவாமிகள்,

> "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
> நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
> தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
> வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
> வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

என்று போற்றித் திருவகவலிற் கூறியருளினமை காண்க. ஐம்பூதங்களிலும் விளங்கும் ஒளியைத் திருமந்திரம், ௧-ம் தந்திரம், ௪-வது ஒளி, ௫-வது பாட்டு ("மேலொளி கீழதன்......" கூறுதல் காண்க. பவளக் கொழுந்து முத்து வயிரம் பொன் - இப் பொருள்கள் மண் (பிருதிவி) என்ற பூதத்தில் ஒளியாய் விளங்கும் பொருள்கள் என்று குறிக்கப்பட்டன. வேறு வேறு தனிப் பொருள்களில் விளங்கும் ஒளியை நாம் ஐம் பூதங்களில் மண்ணில் மாத்திரம் காணலாம் ஆதலின் இவைகள் கூறப்பட்டன. எஞ்சாத் தஞ்சம் மன் உரு - உயிரைத் தவிர ஏழு உருவங்களிலும் விளங்குகின்ற ஒளி. அவைகளில் நிறைந்து விளங்குகிற நாதத்தின் ஒளியாதலின் அது மன் உரு (நிலையான உருவம்) எனப் பட்டது. அந்த நாதத்தைத் தவிர ஏழு உருவங்களில் விளங்குகிற ஒளிக்குப் பிறிது புகலிடமில்லை யாதலின் நாதம் எஞ்சாத் தஞ்சம் என்று கூறப்பட் டது. பாசத்தியில் விளங்குகிற அருளொளி முதலாவது சுத்த மாயையிலுள்ள நாதத் தில் விளங்கி, அந்நாத ஒளி அது நிறைந்திருக்கின்ற எல்லாப் பொருள்களிலும் விளங்கு கின்றது என்பது குறிப்பிடத் தக்கது. எஞ்சாத - எஞ்ஞான்றும் நீங்காத. எஞ்ஞாத தஞ்சம் - போகாப் புகல். வளர் ஒளி - சிவபெருமான் விளங்குகின்ற எட்டு உருவங் களில் ஏனைய ஏழு உருவங்கள் முன்னே கூறப்பட்டதனால் வளர் ஒளி என்பதற்கு

உயிர்ப் பொருள்களில் விளங்கும் ஒளி எனப் பொருளுரைக்கப் பட்டது. உயிரினது தவம் முதிர முதிர சிவபெருமான் அருள் ஒளி அதனிடத்தில் ஏறி வருதலால் ‘வளர் ஒளி எனப் பட்டது. போற்றாதே ஆற்ற நாள் போக்கினேன் - அடிகள் தாம் சமண சமயத்திலிருந்து காலங் கழிந்ததை நினைந்து கூறுகின்றார். ‘இருநிலனாய்த் தீயாகி’ என்ற முந்திய தேவாரப் பாட்டு, சிவபெருமான் மண், நீர், தீ, வளி, யொளி, ஞாயிறு, திங்கள், உயிர் என்ற எட்டு உருவங்களாய் விளங்குகின்றான் என்று கூறியது. இப் பாட்டு அவன் அவ்வுருவங்களில் அருள் ஒளியாயும் (Energising force) விளங்கு கின்றான் என்று கூறுகின்றது. (He is not only Static form but also dynamic force moving the whole world both animate and inanimate) முந்திய பாட்டில் ஞாயிறு திங்கள் என்று கூறியிருப்பவை இப்பாட்டில் நாதம் விந்து எனக் கூறப்பட்டன. ஞாயிறும் திங்களும் முறையே நாதமும் விந்துவுமாகும். திரு மந்திரம், எ-ம் தந்திரம், கஉ-வது குருபூசை, “இந்துவும் பானுவுமென் றெழுகின்ற தோர் - விந்துவு நாதமும்” என்ற எ-வது பாட்டு பார்க்கவும். மின்னுரு முதலாக் கூறப்பட்ட, உரு ஒவ்வொன்றுக்கும் இரண்டாம் வேற்றுமை “ஐ”யை விரித்துப் பொருள் கூறுதலுக்குப் பதிலாக ஐ வரும் இடங்களில் உம் கொடுத்துக் கூறி முடிவில் இவைகள் எல்லாம் ஆகிய சிவபெருமானை என்று பொருள் கூறப்பட்டது.

மலைபல வளர்தரு புவியிடை மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முத லுலகுக ணிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகடல்நடு வறிதுயில மரரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலிமதிள் சிவபுர நினைபவர் திருமகளொடு திகழ்வரே. கங

(உரை) மலைபல வளர்தரு புவியிடை - பல மலைகள் வளர்கிற நில உலகில்; மறைதரு வழிமலி மனிதர்கள் - அறிவு நூல்களிற் கூறப்பட்ட வழியில் ஒழுகி வருகிற மனிதர்களும்; நிலைமலிசுரர் முதல் உலகுகள் - நிலைபெற்றுள்ள தேவர் முதலியவர்கள் வாழ்கின்ற தேவலோக முதலிய உலகங்களும்; நிலைபெறும் வகை மிகும் நினைவொடு - நிலையாக நின்று நிலவும்படி (உள்ளத்தில்) நினைக்கும் மேலான நினைவுடன்; அலைகடல் நடு அறிதுயில் அமர் அரியுருவியல் பரன் - அலைகள் வீசுகிற கடலின் நடுவில் அறிதுயில் செய்யும் திருமாலின் உருவங்கொண்டுள்ள இறைவன்; உறைபதி - எழுந்தருளி யிருக்கும் இடமாகிய; சிலை மலி மதிள் சிவபுரம் - கற்கள் நிறைந்துள்ள மதிற் சுவர்களாற் சூழப்பட்ட திருச்சிவபுரத்தை; நினைபவர் - (உள்ளத்தில்) எண்ணிக் கொண்டிருப்பவர்கள்; திருமகளொடு திகழ்வர் - திருமகள் அருட்பார்வையால் உண்டாகும் எல்லாச் செல்வங்களோடுங் கூடிச் சிறப்பாய் வாழ்வார்; ஏ - அசை.

(விளக்கம்) இத்தேவாரம் இறைவன் திருமாலை அதிட்டித்துக் காத்தற் றொழில் செய்தலைக் கூறுகின்றது. ‘மலைபல வளர்தரு’ என்பது மலைகள் வளர்ந்து வருவனவாக மேல்நாட்டு இயற்கை ஆராய்ச்சியாளரும் இக்காலத்துக் கூறுகிறார்கள். ‘வளர்தரு’ என்பதில் ‘தரு’ துணைவினை. வளர்கின்ற என்பது பொருள். மலையிற் பலநுகர் பொருள்கள் உண்டாதலானும், அதனிடை நின்று வருகிற யாறுகளால் நிலவளமும் நீர் வளமும் உண்டாதலானும், ‘மலைபல வளர்தரு புவி’ என்று புவி சிறப்பித்துக் கூறப்பட்டது. மறை - மறைவாயுள்ள உண்மைகளை எது மக்களுக்கு உணர்த்துமோ அது மறை. ஆகு பெயர். அது இங்கே பொதுவாய் அறிவு நூலைக் குறிக்கின்றது. ‘மறைதரு’ என்பதில், தரு - கூறுகின்ற ‘மறைதரு வழிமலி மனிதர்கள் நிலைபெறு வகை’ எனவே, மறைகளிற் கூறுகிற அறத்தின் வழி நடவாதார் நிலைபெற்றுச் சிறப்பாக வாழமாட்டார் என்பது பெறப்பட்டது. அறிதுயில் - கனவு அறிவுடன் சிந்திக்கின்ற. நினைபவர் - இறைவன் உயிர்களுக்காக அருளினால் எப்பொழுதும் செய்து வரும் காத்தற் றொழிலையும் அவன் அருளையும் உள்ளத்தில் எண்ணுகிறவர்கள்.

விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறிதீயு மல்லர் தெளிநீரு மல்லர் தெரியில்



அரிதரு கண்ணியாளை யொருபாக மாக வருள் காரணத்தில் வருவார்
எரியர வாரமார் பரிமை யாருமல்ல ரிமைப்பாரு மல்ல ரிவரே. கச

(உரை) தெரியில் - நுணுகி ஆராய்ந்து பார்த்தால்; இவர் - இறைவன்; விரிகதிர் ஞாயிறு அல்லர் - விரிந்த கிரணங்களையுடைய கதிரோன் அல்லர்; திங்கள் அல்லர் திங்களும் அல்லர்; வேதவிதியல்லர் - அறிவு நூல்களிற் கூறப்படும் ஆணையும் (நியமம்) அல்லர்; விண்ணும் நிலனும் திரிதருவாயுவல்லர் - விண்ணிலும் மண்ணிலும் திரிகிற காற்றுமல்லர்; செறிதீயுமல்லர் - நெருங்கி எரிகின்ற தீயுமல்லர்; தெளிநீருமல்லர் - தெள்ளிய நீரும் அல்லர்; அரிதரு கண்ணியாளை - செவ்அரி பரந்த கண்களை உடைய உமாதேவியாரை; ஒரு பாகமாக அருள்காரணத்தில் வருவார் - உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தமது இடது பாகத்தில் வைத்திருப்பவர்; எரி அரவு ஆரம்மார்பர் - சினம் கொள்ளும் பாம்பை மாலையாக மார்பில் அணிந்தவர்; இமையாரும் அல்லர். உயிர்களுக்கு ஒளி செய்யாதிருப்பவருமல்லர்; இமைப்பாரும் அல்லர் - ஒளி செய்கிறவரும் அல்லர்.

(விளக்கம்) இத்தேவாரம், இறைவனுடைய உண்மை இயலை(சொரூப இலக்கணத்தைக்கூறுகிறது.இறைவனை “இருநிலனாய்த் தீயாகி” என்ற பாட்டில் ஞாயிறாகியும் திங்களாகியும் இருக்கிறான் என்று கூறிவிட்டு இப்பாட்டில் ஞாயிறுமல்லன், திங்களுமல்லன், எனக் கூறுவது முரணாதோ எனின் முரணாது. ‘இருநிலனாகி’ என்ற பாட்டில் இறைவனுடைய பொது இயலும் (தடத்த இலக்கணமும்) ‘இப்பாட்டில், அவனுடைய உண்மை இயலும் (சொரூப இலக்கணமும்) கூறப்பட்டன ஆகலின். இறைவனுடைய அருள் ஆற்றல் விளங்கும். உலகில் அவன் ஞாயிறு திங்கள் முதலிய எட்டு வடிவங்களை உடையவனாயிருக்கிறான் என்பதும், உலகில் விளங்காது தானாக நிற்கும் தன்னுடைய உண்மை நிலையில் அவன் ஞாயிறு திங்கள் அல்லன் என்பதும் கூறப்பட்டன. திருநாவுக்கரசு சுவாமிகள் பிற இடங்களிலும் ‘அருக்கனாவான் அரனுருவல்லனோ’ என்றும் “அங்கதிரோன் றன்னை அண்ணலாக் கருதவேண்டாம்” என்றும் “மண்ணல்லை விண்ணல்லை” என்றும் கூறியருளினமை காண்க. வேதங்களும் இறைவனை விசுவன் (உலகினுள்ளான்) எனக் கூறியதுடன் விசுவாதீதன் (உலகினைக் கடந்தவன்) எனவும் கூறுகின்றன. எரி அரவு - எரி என்ற சொல்லுக்கு ஒளி விளங்குகின்ற என்றும் பொருள் கூறலாம். அரவு - ஒளி விளங்கும் விந்து - சத்தியாகிய குண்டலி சத்தியைக் குறிக்கிறது. குண்டலி - பாம்பு. இமையாரு மல்லா. இமைப்பாரு மல்லர் என்பதில் இமைத்தல் - விளங்குதல், ஒளி செய்தல், “மின்னுறழ் இமைப்பிற் சென்னி பொறப்பன்” என்ற திருமுருகாற்றுப்படை அடு-வது வரியில், ‘இமைப்பு’ என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் ‘விளக்கம்’ என்று உரை செய்திருத்தல் காண்க. இமையார்-ஒளி செய்யார். (எதிர் மறை) இமைப்பார் - ஒளி செய்வார். (உடன்பாடு) ஒளி செய்தல்=அறிவு விளங்கச் செய்தல் இறைவனுடைய அளவில் பேரொளிக்கு நாம் உலகிற்காணும்படி எடுத்துக் காட்டாக விளங்குவது கதிரவன் ஒளி. அக்கதிரவன் ஒளி முன்னர் எல்லா உயிர்களும் இயங்குவன அன்றி அவன் ஒருயிர்க்கு ஒளி செய்தலும் பிறிதோர் உயிர்க்கு ஒளி செய்யாதிருத்தலும் இலன். அதுபோல், பேரொளியாய் விளங்குகிற இறைவன் திருமுன்பு எல்லா உயிர்களும் தங்கள் வினைக்கு ஏற்ப அறிவு விளங்கப்பெற்று இயங்கும் தகுதி அடைகின்றன. அவன் உயிர்கள் எல்லாமும் தகுதி அடையவேண்டும் என்ற எண்ணங் கொண்டு (சங்கற்பித்து) அவைகளை இயங்க வைக்கின்றான் (அதிட்டிக்கின்றான்) அன்றிக் காணத்தால் இயங்க வைக்கிறான். (அதிட்டிக்கிறான்) அல்லன். ஆதலின், உயிர்கள் பொருள்களை நுகர்ந்து வேற்றுமைப்படுவனபோல், அவன் வேற்றுமைப் படான். “மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டிக்கும் என்னும் மறை” என்பதும் இதுவே.* ‘இமையாரு மல்லர் இமைப்பாரு மல்லர்’ என்பது உலக இயக்கத்துக்கு இறைவன் காரணனா யிருப்பினும் வேற்றுமைப்படான் என்பதை உணர்த்துகிறது.

மாயமாய மனங்கெடுப் பானை மனத்துளே மதியா யிருப்பானைக்
காயமாயமு மாக்கு விப்பானைக் காற்றுமாய்க் கனலாய்க் கழிப்பானை
ஓயுமாறுரு நோய்புணர்ப்பானை யொல்லை வல்வினைகள் கெடுப்பானை
வேய்கொ டோளுமை பாகனைநீடூர் வேந்தனைப் பணியா விடலாமே. கரு

* இமையார் இமைப்பர் என்பனவற்றிலுள்ள இமைத்தலுக்குக் கண்ணிமைத்தல் எனப்பொருள்கொண்டு அவை முறையே தேவர்கள் மக்கள் என்று பொருள்ப[redacted] கூறுதலுமுண்டு.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 7.

வெளி வந்து விட்டன ! வெளி வந்து விட்டன !!

# நம் சமாஜ வெளியீடுகள்

## திருவாசகம்

நல்ல கிளேஸ் காகிதத்தில் கிரவுன் அளவில்
160 பக்கங் கொண்ட அடக்கவிலைச் சுத்தப்பதிப்பு

தனிப்பிரதி அணா 2½. பத்துப் பிரதிகள் ரூ. 1-4-0.

தபாற்கூலி வேறு.

## திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

என்ற அ, ௯ திருமுறைகள் - நல்ல கிளேஸ் காகிதத்தில் கிரவுன் அளவில் [illegible] பக்கங்கொண்ட அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு - மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம், ஆராய்ச்சிக் குறிப்புகள், திருவிசைப்பா ஆசிரியர் சரித்திரம், முதற்குறிப்பகராதி முதலியன அடங்கியது.

தனிப்பிரதி அணா 10. 10 பிரதிகளின் விலை ரூபா 5.

தபாற்கூலி வேறு.

நம் சமாஜ வெளியீடு. உடனே வாங்குக.

# தல யாத்திரைப் படம்

விளக்கத்துடன் விலை அணா நான்கு. ஐந்து பிரதிகள் ரூபா 1. தபாற்கூலி வேறு.

இப்படத்திலும் விளக்கத்திலும், பாடல்பெற்ற சிவ ஸ்தலங்கள், நூற்றெட்டு திவ்விய திருப்பதிகள் (விஷ்ணு ஸ்தலங்கள்), திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய ஸ்தலங்கள் வடநாட்டுத் தலங்கள் உள்ள இடங்கள், ரயில்வே வழிகள், ஸ்டேஷன்கள், ஸ்டேஷனுக்கும் கோவிலுக்கும் உள்ள தூரம், மோட்டார் வண்டி, சத்திரம் முதலிய வசதிகள் எல்லாம் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன. [illegible] இந்தியா முழுமையும் தலயாத்திரை செய்வதற்கு அரும் பெருந்துணை [illegible]

வர்ணங் கொடுத்த படம் (Coloured Map) விலை அணா 6, (தபாற்கூலி வேறு).

வர்ணங் கொடுத்த படம் ஒவ்வொருவருக்கும் ஒன்றுதான் கிடைக்கும்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்.
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. 10—7—1932

இங்ஙனம் :
ம. பாலசுப்பிரமணியம்,
காரியதரிசி.

Printed by T. V. Volaganat[illegible] Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. [illegible]iar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150 [illegible] Street, G. T. Madras.